| மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்<br><br>சிவகங்கை | **சிவகங்கை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,**<br>**சிவகங்கை கூட்டுறவுச் சங்கங்களின்**<br>**இணைப்பதிவாளர் அலுவலகம்,**<br>**ஒருங்கிணைந்த கூட்டுறவு அலுவலக வளாகம்,**<br>**மாவட்ட ஆட்சியர் வளாகம், யூனிட்–2,**<br>**அரசு மகளிர் கலைக்கல்லூரி எதிரில்,**<br>**காஞ்சிரங்கால், சிவகங்கை – 630562** |
|---|---|

விளம்பர எண். 03–2020 நாள். 11.03.2020

# மறு அறிவிப்பு

சிவகங்கை மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் காலியாகவுள்ள 30 உதவியாளர் பதவிகளுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கான எழுத்துத்தேர்வு 17.05.2020 அன்று முற்பகல் 10.00 மணி முதல் 1.00 மணிவரை சிவகங்கை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படவுள்ளது. இத்தேர்விற்கு தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் www.drbsvg.net என்ற இணையதளம் வழியாக (through online only) மட்டுமே 03.04.2020 அன்று பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

இத்தேர்விற்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி, கூட்டுறவுப் பயிற்சி, வயதுவரம்பு, இடஒதுக்கீடு, இனசுழற்சி, தேர்விற்கான பாடத்திட்டம், தேர்வுக்கட்டணம், தேர்வு நடைபெறும் நாள் மற்றும் பிற விவரங்களுக்கு சிவகங்கை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளத்தில் www.drbsvg.net வெளியிடப்பட்டுள்ள விரிவான அறிவிக்கையை காணவும்.

**“இப்பணியிடங்களுக்கு ஏற்கனவே வெளியிடப்பட்ட விளம்பர எண். 2/2019ன்படி 5.8.2019 முதல் 14.9.2019 வரை சிவகங்கை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு விண்ணப்பக்கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பித்தால் மட்டுமே அவர்களது விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அவர்கள் மீண்டும் விண்ணப்ப கட்டணம் செலுத்த தேவையில்லை. அவர்கள் பழைய விண்ணப்ப கட்டண இரசீது எண்ணை மீண்டும் ஒருமுறை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம். அவர்களது பழைய விண்ணப்பம் எக்காரணத்தைக் கொண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. அவர்கள் மீண்டும் விண்ணப்பிக்காவிட்டால் ஏற்கனவே செலுத்திய பணம் திருப்பி அளிக்கப்படமாட்டாது.”**

இணைப்பதிவாளர்/தலைவர்
சிவகங்கை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்